


எழுதியவர்:
பைஸல் இப்னு மிஸ்ஃபிர் இப்னி
மஅவ்லி அஸ்-ஸினாமீ அல்-வாதிஈ.

# كنز الأطفال

# குழந்தைகளின் பொக்கிஷம்

தமிழில்:
ஸாஜித் இப்னு நஸ்ருதீன் அஸ்ஸெய்லானி
வப்பகஹுல்லாஹ்

# كتاب التَّوحِيدِ والعَقِيدَةِ

## தவ்ஹீத் மற்றும் அகீதா சம்பந்தமான பாடம்

# بَابُ الإِيمَانِ، وَمَرَاتِبُ الدِّينِ

## ஈமான் மற்றும் மார்க்கத்தின் படித்தரங்கள் பற்றிய பிரிவு



கேள்வி / பதில்
01

## س (١) مَا هِي مَراتِبُ الدِّيْنِ ؟

## மார்க்கத்தின் படித்தரங்கள் எத்தனை?

ج (١) ثَلاثٌ: الإسْلامُ. وَالإيمْانُ. وَالإحْسَانُ.

மார்க்கத்தின் படித்தரங்கள் மூன்று:

1. இஸ்லாம் 2. ஈமான் 3. இஹ்ஸான்

[ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 08]



**கேள்வி / பதில்**

**02**

## س (٢) مَا هِيَ الأَرْبَعُ المَسَائِل التِّي يَجِبُ عَلَيْنَا تَعَلُّمُهَا ؟

## நாம் கட்டாயமாகக் கற்றுக் கொள்ள வேண்டிய நான்கு விஷயங்கள் எவை?

ج (٢) الأُوْلَى: اَلْعِلْمُ، وَالثَّانِيَةُ: اَلْعَمَلُ بِهِ، وَالثَّالِثَةُ: الدَّعْوَةُ إِلَيْهِ، وَالرَّابِعَةُ: الصَّبْرُ عَلَى الأَذَى فِيْهِ.

1. அறிவு.
2. அந்த அறிவைக் கொண்டு செயல்படுதல்.
3. அதன்பால் அழைத்தல்.
4. அதனால் ஏற்படும் நோவினைகளின் போது பொறுமையாக இருத்தல்.

[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா முஹம்மத்:19, சூரா அல் அஸ்ர்: 1-3]




ஈமான் மற்றும் மார்க்கத்தின் படித்தரங்கள் பற்றிய பிரிவு

## கேள்வி / பதில் 03

س (٣) مَا هِيَ الأُصُولُ الثَّلاثَةُ الَّتِي يَجِبُ عَلَى المُسْلِمِ مَعْرِفَتُهَا ؟

**ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய மூன்று அடிப்படை விஷயங்கள் என்ன?**

ج (٣) مَعْرِفَةُ اللّٰهِ، وَمَعْرِفَةُ نَبِيِّهِ، وَمَعْرِفَةُ دِينِ الإِسْلامِ،
وَهِيَ الأَسْئِلَةُ الثَّلَاثَةُ الَّتِيْ يُسْأَلُ عَنْهَا الإِنْسَانُ فِيْ قَبْرِهِ .




1. அல்லாஹ்வைப் பற்றி அறிந்து கொள்ளல்.
2. அவனுடைய நபியைப் பற்றி அறிந்து கொள்ளல்.
3. இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி அறிந்து கொள்ளல்.

மேலும் இவைகள் ஒவ்வொரு மனிதனின் கப்ரில் கேட்கப்படும் மூன்று கேள்விகளாகும்.

[ஆதாரம்: முஸ்னத் அஹ்மத்: 18534]

## கேள்வி / பதில்

## 04

س (٤) مَنْ رَبُّكَ ؟

**உன்னுடைய இறைவன் யார்?**

ج (٤) رَبِّي اللّٰه.

**என்னுடைய இறைவன் அல்லாஹ்.**




[ஆதாரம்: அல்-குர்ஆன் சூரா அல் ஃபாதிஹா: 2, சூரா அல் அன்ஆம்: 164]

கேள்வி / பதில்

05

س (٥) مَنْ نَبِيُّكَ؟

## உன்னுடைய நபி யார்?

Web Design Projects

ج (٥) نَبِيِّي مُحَمَّدٌ ﷺ.

## என்னுடைய நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா அல் அஹ்ஸாப்: 40]




ஈமான் மற்றும் மார்க்கத்தின் படித்தரங்கள் பற்றிய பிரிவு

கேள்வி / பதில்

06

س (٦) مَا دِينُكَ ؟

**உன்னுடைய மார்க்கம் என்ன?**

ج (٦) دِينِي الإِسْلاَمُ.

**என்னுடைய மார்க்கம் இஸ்லாம்.**

[ஆதாரம்: அல்-குர்ஆன்: சூரா ஆலு இம்ரான் 3: 19]




ஈமான் மற்றும் மார்க்கத்தின் படித்தரங்கள் பற்றிய பிரிவு

கேள்வி / பதில்
07

## س (٧) مَنْ خَلَقَكَ؟

## உன்னைப் படைத்தவன் யார்?

ج (٧) اللّٰهُ خَلَقَنِي وَخَلَقَ جَمِيعَ المَخْلُوْقَاتِ.

என்னைப் படைத்தவன் அல்லாஹ். மேலும் அனைத்துப் படைப்புக்களையும் படைத்தவனும் அல்லாஹ்.

[ஆதாரம்: அல்-குர்ஆன்: சூரா அஸ்- ஸுமர், 39: 62]



# கேள்வி / பதில் 08

س (٨) لِمَاذَا خَلَقَنَا اللّٰهُ؟

**அல்லாஹ் ஏன் எங்களைப் படைத்தான்?**

ج (٨) خَلَقَنَا لِـعِبادَتِهِ.

அவனை மாத்திரம் வணங்குவதற்காக அவன் எங்களைப் படைத்தான்.

[ஆதாரம்: அல்-குர்ஆன்: சூரா அஜ்-ஜாரியாத்: 51: 56]




ஈமான் மற்றும் மார்க்கத்தின் படித்தரங்கள் பற்றிய பிரிவு

கேள்வி / பதில்
09

## س (٩) مَا هِيَ العِبادَةُ؟

## இபாதத் (வணக்கம்) என்றால் என்ன?

ج (٩) اسمٌ جَامِعٌ لِـكُلِّ مَا يُحِبُّهُ للَّه وَيَرْضاهُ مِن: الأقْوَالِ,
وَالأَعْمَالِ الظَّاهِرَةِ والبَاطِنَةِ .

அல்லாஹ் விரும்பக்கூடிய இன்னும் பொறுந்திக் கொள்ளக்கூடிய வெளிரங்கமான மற்றும் உள்ரங்கமான சொல் செயல் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு பெயர்ச் சொல் ஆகும்.

[நூல்: 44 :كتاب العبودية]



ஈமான் மற்றும் மார்க்கத்தின் படித்தரங்கள் பற்றிய பிரிவு

கேள்வி / பதில்

10

# س (١٠) مَا هُوَ الإِسْلَامُ؟

# இஸ்லாம் என்றால் என்ன?

ج (١٠) هُوَ: الِاسْتِسْلَامُ لِلَّهِ بِالتَّوْحِيدِ، وَالِانْقِيَادُ لَهُ بِالطَّاعَةِ، وَالْخُلُوصُ وَالْبَرَاءَةُ مِنَ الشِّرْكِ وَأَهْلِهِ.

ஏகத்துவத்துவத்தைக் கொண்டு அல்லாஹ்வுக்கு சரணடைவதும்; மேலும் வழிப்படுவதில் அவனுக்கு கட்டுப்படுவதும்; இன்னும் நிரகரிப்பிலிருந்தும், நிராகரிப்பவர்களிலிருந்தும் நீங்கித் தூரமாகி இருப்பதே இஸ்லாமாகும்.

[ஆதாரம்: சூரா அல் ஹஜ் 22: 34, சூரா லுக்மான் 31: 22, சூரா அல் பகரா: 2: 256]




ஈமான் மற்றும் மார்க்கத்தின் படித்தரங்கள் பற்றிய பிரிவு

கேள்வி / பதில்

11

# س (١١) كَمْ أَرْكَانُ الْإِسْلَامِ؟

# இஸ்லாத்தின் தூண்கள் எத்தனை?

ج (١١) خَمْسَةٌ، هِيَ:
شَهَادَةُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ، وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ. وَإِقَامُ الصَّلَاةِ. وَإِيتَاءُ الزَّكَاةِ. وَصَوْمُ رَمَضَانَ.
وَحَجُّ الْبَيْتِ لِمَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا

இஸ்லாத்தின் தூண்கள் ஐந்து. அவை:

1. உண்மையாக வணங்கி வழிபடத்தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. இன்னும் நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வுடைய தூதராகவும் இருக்கின்றார் என்று சாட்சியம் சொல்லல்.
2. தொழுகையை நிலை நாட்டுதல்.
3. ஸகாத்தைக் கொடுத்தல்.
4. ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றல்.
5. அல்லாஹ்வின் வீட்டுக்குச் சென்று வர சக்தி பெற்றவர் ஹஜ் செய்தல்.

[ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி: 8, ஸஹீஹ் முஸ்லிம்: 16]



கேள்வி / பதில்

12

س (١٢) مَا هُوَ الدِّينُ الَّذِي لَا يَقْبَلُ اللَّهُ غَيْرَهُ؟

**அல்லாஹ் அதைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டான்; அந்த மார்க்கம் என்ன?**

ج (١٢) هُوَ: الْإِسْلَامُ.

**அது இஸ்லாம் மார்க்கம் ஆகும்.**




[ஆதாரம்: சூரா அல் ஹஜ் 22: 34, சூரா லுக்மான் 31: 22, சூரா அல் பகரா: 2: 256]

கேள்வி / பதில்

13

س (١٣) عَلَى أَيِّ مِلَّةٍ يُولَدُ الْمَوْلُودُ؟

**ஒவ்வொரு குழந்தையும் எந்த மார்க்கத்தின் மீது பிறக்கின்றன?**




ج (١٣)عَلَى مِلَّةِ الْإِسْلَامِ.

**ஒவ்வொரு குழந்தையும் இஸ்லாம் மார்க்கத்தின் மீது பிறக்கின்றன.**

[ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி: 1385, ஸஹீஹ் முஸ்லிம்: 2658]

கேள்வி / பதில்
14

س (١٤) اذْكُرْ أَرْبَعًا مِنْ مِلَلِ الْكُفْرِ؟

## நிராகரிப்பில் உள்ள நான்கு வெவ்வேறு மதங்களைக் குறிப்பிடுக?

ج (١٤): اليَهُودِيَّةُ / النَّصْرَانِيَّةُ / الصَّابِئَةُ / المَجُوسِيَّةُ

1. யூத மதம்
2. கிறிஸ்தவ மதம்
3. அஸ்ஸாபிஆஹ் மதம்
4. மஜூஸ் (நெறுப்பு வணங்கிகள்) மதம்

[ஆதாரம்: சூரா அல் ஹஜ்: 22: 17]





கேள்வி / பதில்

15




## س (١٥) هَلِ الْيَهُودُ وَالنَّصَارَى رَاضُونَ عَنِ الْمُسْلِمِينَ؟

## யூதர்களும், கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களைக் கொண்டு திருப்தி அடையக் கூடியவர்களா?

ج (١٥) لاَ، قال تعالى:

{وَلَن تَرۡضَىٰ عَنكَ ٱلۡيَهُودُ وَلَا ٱلنَّصَٰرَىٰ حَتَّىٰ تَتَّبِعَ مِلَّتَهُمۡۗ قُلۡ إِنَّ هُدَى ٱللَّهِ هُوَ ٱلۡهُدَىٰ}

இல்லை. உயர்ந்தவனாகிய அல்லாஹ் கூறுகிறான்:

[(நபியே!) நீங்கள் யூத மற்றும் கிறிஸ்தவர்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றும் வரையில் உங்களைக் குறித்து அவர்கள் திருப்தியடையவே மாட்டார்கள். (ஆகவே அவர்களை நோக்கி) "அல்லாஹ்வின் நேர்வழி(யாகிய இஸ்லாம்) தான் நேரான வழி. (அதனையே பின்பற்றுவேன்)" எனக் கூறிவிடுங்கள். [ஸூரதுல் பகரா: 120]

[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா அல் பகரா 2: 120]

கேள்வி / பதில்

16

س (١٦) مَنْ هُمْ شَرُّ الْبَرِيَّةِ، وَمَنْ هُمْ خَيْرُ الْبَرِيَّةِ؟

படைப்புகளில் மிக கெட்டவர்கள் யார்? இன்னும் படைப்புகளில் மிக நல்லவர்கள் யார்?




ج (١٦) شَرُّ الْبَرِيَّةِ: الْكُفَّارُ، وَخَيْرُ الْبَرِيَّةِ: الْمُؤْمِنُونَ.

படைப்புகளில் மிகக் கெட்டவர்கள் நிராகரிப்பாளர்கள். இன்னும் படைப்புகளில் மிக நல்லவர்கள் விசுவாசிகள் (இறை நம்பிக்கையாளர்கள்).

[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா அல் பய்யினா, 98: 6-8]

கேள்வி / பதில்

17

س (١٧) هَلِ الْكَافِرُ يَعِيشُ فِي حَيَاةٍ طَيِّبَةٍ؟

**இறை நிராகரிப்பாளன் நல்ல வாழ்க்கை வாழ்கின்றானா?**

ج (١٧) لاَ.

இல்லை.




[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா தாஹா, 20: 124]

கேள்வி / பதில்

18

س (١٨) مَنْ هُمْ أَهْلُ الْكِتَابِ؟

**வேதங் கொடுக்கப்பட்டவர்கள் யார்?**

ج (١٨) هُمُ: الْيَهُودُ وَالنَّصَارَى.

**யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்.**

[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா அல் பகரா, 2: 113, சூரா அல் மாயிதா, 5: 68]



س (١٩) هَلْ دِينُ الْإِسْلَامِ كَامِلٌ أَمْ يَحْتَاجُ إِلَى تَكْمِيلٍ؟

இஸ்லாம் பூரணமான ஒரு மார்க்கமா? அல்லது பூரணத்துவத்தின் பக்கம் அது தேவை காணுகின்றதா?




ج (١٩) دِينُ الْإِسْلَامِ كَامِلٌ.

இஸ்லாம் பூரணமான ஒரு மார்க்கம் ஆகும்.

[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா அல் மாயிதா 5: 3]

கேள்வி / பதில்

# 20




س (٢٠) مِنْ أَيْنَ يَأْخُذُ الْمُسْلِمُ دِينَهُ؟

## ஒரு முஸ்லிம் அவனுடைய மார்க்கத்தை எங்கிருந்து எடுக்க வேண்டும்?

ج (٢٠) مِنَ الْكِتَابِ وَالسُّنَّةِ.

அல்லாஹ்வுடைய புத்தகமான அல்-குர்ஆனிலிருந்தும் இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஸுன்னாவிலிருந்தும் எடுக்க வேண்டும்.

[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா அல் அஃராப் 7: 3, சூரா அல் ஹஷ்ர் 59: 7, சூரா அந் நிஸா 4: 115]

கேள்வி / பதில்
21

س (٢١) مَا عَقِيدَتُكَ؟

**உன்னுடைய கொள்கைக் கோட்பாடு என்ன?**

ج (٢١) سُنِّيٌّ سَلَفِيٌّ.

நான் சுன்னி (அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாவை சரியான முறையில் பின்பற்றுபவன்)ஆகவும்; ஸலபி (அல்-குர்ஆன், அஸ்ஸுன்னாவை ஸலபுஸ்ஸாலிஹீன்கள் விளக்கத்தின் அடிப்படையில் விளங்குபவன்) ஆகவும் இருக்கின்றேன்.

[ஆதாரம்: அல் குர்ஆன்: சூரா அந் நிஸா 4: 115. முஸ்னத் அஹ்மத்: 17142, அபூ தாவூத்: 4607]



கேள்வி / பதில்

22

# س (٢٢) مَا هِيَ الْجَاهِلِيَّةُ؟

## ஜாஹிலிய்யாஹ் (அறியாமை) என்றால் என்ன?

ج (٢٢) هِيَ كُلُّ مَا خَالَفَ الْكِتَابَ وَالسُّنَّةَ.

அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாவுக்கு முரணான அனைத்தும் ஜாஹிலிய்யா ஆகும்.




[ஆதாரம்: அல் குர்ஆன் சூரா அல் மாயிதா 5: 50
ஸஹீஹுல் புகாரி: 30, 3834, ஸஹீஹ் முஸ்லிம்: 1661]

ஈமான் மற்றும் மார்க்கத்தின் படித்தரங்கள் பற்றிய பிரிவு

கேள்வி / பதில்

## 23

س (٢٣) مَا أَوَّلُ عُرْوَةٍ مِنْ عُرَى الْإِسْلَامِ تُنْقَضُ؟ وَمَا آخِرُهُنَّ؟

**இஸ்லாத்துடைய முடிச்சுகளில் இருந்து முதலாவது முறிக்கப்படும் முடிச்சு என்ன? மேலும் இறுயானது என்ன?**

ج (٢٣) أَوَّلُهُنَّ نَقْضًا: الْحُكْمُ، وَآخِرُهُنَّ نَقْضًا: الصَّلَاةُ.

அவற்றில் முதலாவது முறிக்கப்படுவது; அல்லாஹ்வின் சட்டத்தைக் கொண்டு தீர்ப்பளிக்காமல் இருப்பதும்; இறுதியாக முறிக்கப்படுவது, தொழுகையை விட்டு நீங்குவதும் ஆகும்.




[ஆதாரம்: முஸ்னத் அஹ்மத்: 22160]

கேள்வி / பதில்

24

# س (٢٤) مَا هُوَ الْإِحْسَانُ؟

# இஹ்ஸான் என்றால் என்ன?

ج (٢٤) أَنْ تَعْبُدَ اللَّهَ كَأَنَّكَ تَرَاهُ، فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ.

இஹ்ஸான் என்றால் நீ அல்லாஹ்வை பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று வணங்குவது ஆகும்; நீ அவனைப் பார்க்காவிட்டாலும், அவன் நிச்சயமாக உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

[ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 08]





கேள்வி / பதில்
25

س (٢٥) فِي أَيِّ سُورَةٍ قَوْلُهُ تَعَالَى:
﴿إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالعَدلِ وَالإِحسانِ وَإيتاءِ ذِي القُربى وَيَنهى عَنِ الفَحشاءِ وَالمُنكَرِ وَالبَغيِ يَعِظُكُم لَعَلَّكُم تَذَكَّرونَ﴾ ؟

உயர்ந்தவனாகிய அல்லாஹுத் தஆலாவின் கூற்று எந்த சூராவிலே இடம்பெறுகின்றது?

[(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் நீதி செலுத்தும்படியாகவும், நன்மை செய்யும்படியாகவும், உறவினர்களுக்கு(ப் பொருள்) கொடுத்து உதவி செய்யும்படியாகவும் நிச்சயமாக அல்லாஹ் (உங்களை) ஏவுகிறான். மானக்கேடான காரியங்கள், அநியாயம், பாவம் ஆகியவைகளிலிருந்து (உங்களை) அவன் தடை செய்கிறான். (இவைகளை) நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுமாறும் அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்.

ج (٢٥) فِي سُورَةِ النَّحْلِ.

சூரா அந்நஹ்லிலே இடம் பெறுகிறது.